தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com


RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 134 | 4 Pages | 12.12.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 134 | 4 பக்கங்கள் | 12.12.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் அலன்**

**விளக்கம்:** ஒருவன்எந்தப்பொருளிலிருந்து, எந்தப்பொருளிலிருந்துபற்றுநீங்கியவனாக இருக்கின்றானோ, அந்தந்தப் பொருளால் அவன் துன்பம் அடைவதில்லை.

## ஜப்பானில் பிறப்பு விகிதத்தை உயர்த்த தைரியமான முடிவை எடுத்த அரசு



டோக்கியோ, டிச.12

ஜப்பானில் கடந்த ஆண்டில் வரலாறு காணாத அளவில் குழந்தைப் பிறப்பு விகிதம் சரிவடைந்துள்ளது. 2022ம் ஆண்டு பதிவானதைக் காட்டிலும் கடந்த ஆண்டு பிறப்பு விகிதம் 5.6 சதவீதம் குறைந்து 727,277 ஆகப்பதிவானது.ஆகவேஜப்பானில்பிறப்புவிகிதத்தைஅதிகரிப்பதற்காக வாரத்தில் 4 நாட்கள் மட்டுமே வேலை செய்யும் நடைமுறையை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள அரசு அலுவலகங்களில் கொண்டு வரப்பட உள்ளதாக டோக்கியோ கவர்னர் யூரிகோ கொய்கே அறிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு (2025) ஏப்ரல் முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதனால் ஊழியர்கள் குடும்பத்துடன் அதிக நேரம் செலவிடுவார்கள் என்றும் அவர்கள் உடல் மற்றும் மனதளவில் ஆரோக்கியமாக இருப்பார்கள் என்றும் கவர்னர் யூரிகோ கொய்கே தெரிவித்துள்ளார்.

## சிரியாவுக்குள் ஆழமாக ஊடுருவி தாக்குதல் நடத்தியதா இஸ்ரேல்..?



டமாஸ்கஸ், டிச.12

சிரியாவின் பெரும் பகுதிகளை கிளர்ச்சிக் குழுக்கள் கைப்பற்றியதையடுத்து அதிபர் ஆசாத்தின் அரசு கவிழ்ந்தது. அதிபர் ஆசாத், நாட்டைவிட்டு தப்பிச்சென்றுரஷியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். இதையடுத்து சிரியாவில் அரசியல் நெருக்கடி உருவாகி உள்ளது. அதிபர் நாட்டை விட்டுச் சென்றபோதும், பிரதமர் தொடர்ந்து பதவியில் நீடிக்கிறார். சுமுகமான முறையில் அதிகார மாற்றம் தொடர்பாக பிரதமரை கிளர்ச்சியாளர்கள் குழு சந்தித்து ஆலோசனை நடத்தியதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கிடையே இஸ்ரேல் தனது பாதுகாப்பிற்காக சிரியா முழுவதும் இஸ்ரேல்கடுமையானவான்வழித்தாக்குதல்களைநடத்தியது.சிரியாவில் உள்ள ரசாயன ஆயுதங்கள், ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்கள் கிளர்ச்சியாளர்களிடம் கிடைத்தால் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கருதி இஸ்ரேல் இந்த தாக்குதலை நடத்தி உள்ளது.

இஸ்ரேல் படைகள் நாட்டிற்குள் தொடர்ந்து முன்னேறி, தலைநகரில் இருந்து 25 கிலோ மீட்டர் தொலைவு வரை சென்றதாக சிரியாவின் எதிர்க்கட்சி போர் கண்காணிப்பகம் இன்று தெரிவித்தது. ஆனால், தலைநகர் நோக்கி படைகள் முன்னேறுவதாக வெளியான தகவலை இஸ்ரேல் மறுத்துள்ளது.

தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கடுமையான வான் தாக்குதல்நடத்தும்சத்தம்கேட்டதாகசெய்திவெளியானது.அழிக்கப்பட்ட ஏவுகணை லாஞ்சர்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் போர் விமானங்கள் தொடர்பான புகைப்படங்கள் இணையதளத்தில் வெளியாது.

ஆனால் தலைநகரை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கிளர்ச்சிக் குழுக்கள் இதுபற்றி எந்த தகவலும் தெரிவிக்கவில்லை.

முன்னதாக, சிரியாவிற்குள் சுமார் 400 சதுர கிலோமீட்டர் பாதுகாப்பு மண்டலத்தை இஸ்ரேல் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. ஆசாத் அரசு கவிழ்ந்தபின்னர் தாக்குதல்களை தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

## வெளிநாடு செல்ல தென்கொரிய அதிபருக்கு தடை



சியோல், டிச.12

தென்கொரியாவில்அதிபர்யூன்சுக்இயோல் தலைமையிலான மக்கள் அதிகார கட்சி ஆட்சி நடைபெறுகிறது. கடந்த வாரம் தென்கொரியாவில் ராணுவ அவசர நிலை பிரகடனத்தை அதிபர் யூன் சுக்இயோல் அறிவித்தார். இவரது இந்த முடிவுக்கு ஆளுங்கட்சியிலேயே கடும் எதிர்ப்புகள் கிளம்பின.

இதனையடுத்து அவசர நிலை கைவிடப்பட்டது.எனினும்அவசரநிலையை செயல்படுத்தியதற்காக அதிபர் பதவி விலக கோரி நாடு முழுவதும் மக்கள் போராட்டத்தில் குதித்தனர். இதனால் நாட்டு மக்களிடம் அவர் பகிரங்க மன்னிப்பு கோரினார். எனினும், அவருக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. மற்றொரு பக்கம் அவசர நிலை பரிந்துரை செய்ததற்காக அவர் மீது விசாரணை நடத்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால், யூன் சுக்இயோல் தப்பிச் செல்லாமல் இருக்க வெளிநாடுகளுக்கு பயணம் செய்ய அவருக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

# காங்கேயம் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணம்: முதல்வர் உத்தரவு



சென்னை, டிச.12

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில்,

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம் வெள்ளகோவில் செம்மாண்டாம்பாளையம் சாலை, பெரியசாமி நகர் அருகில் இன்று (10.12.2024) காலை வெள்ளகோவில், அகலாப்பாளையம்புதூர் அரசு ஆரம்பப்பள்ளியில்உதவிதலைமை ஆசிரியராகப் பணிபுரிந்துவந்த சரஸ்வதி (வயது 50), அதே பள்ளியில் பயிலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அகலரப்பாளையம்புதூரைச் சேர்ந்த மாணவிகள் செவ்வி,ராகவி (வயது 10) மற்றும் யாழினி (வயது 8) ஆகிய இருவருடன் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோதுதனக்கு முன்னால் சென்ற டிராக்டரை முந்திச்செல்ல முயன்றபோது எதிர்பாராதவிதமாக டிராக்டரின் டிரைவர் மீது மோதிய விபத்தில் த சரஸ்வதி மற்றும் செல்வி ராகவி ஆகிய இருவரும் பலத்த காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியை அறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன். மேலும், இவ்விபத்தில் காயமடைந்து திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் யாழினி என்பவருக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும். அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு 50,000 ரூபாயும் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.என தெரிவிக்கப்பட்டுள்ளது .

# பாரதியாரின் சிலையை பல்லக்கில் தூக்கிச் சென்ற கவர்னர்



சென்னை, டிச.12

மகாகவி பாரதியாரின் 143வது பிறந்தநாள்விழா இன்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி சென்னை கிண்டி கவர்னர் மாளிகையில் இன்று பாரதியார்பிறந்தநாள்விழா கொண்டாட்டம் நடைபெற்றது. அப்போது அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பாரதியாரின் உருவ படத்திற்கு கவர்னர் ஆர். என்.ரவி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதனை தொடர்ந்து பாரதியாரின் தீவிர பற்றாளர்களுடன் சேர்ந்து பாரதியின் சிலை பல்லக்கு ஊர்வலத்தை கவர்னர் ஆர்.என். ரவி கொடியசைத்துத் துவக்கி வைத்து பல்லக்கை தூக்கி சென்றார். இந்த ஊர்வலம் அங்கு உள்ள மகாகவி பாரதியாரின் நினைவு இல்லத்துக்குச் சென்றதும் பாரதியாரின் சிலை அங்கு வைக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

இது குறித்து கவர்னர் ஆர்.என். ரவி எக்ஸ் தளப்பதிவில்,

பாரதத்தாயின்தலைசிறந்த மகன்களில் ஒருவரான மகாகவி சுப்பிரமணிய பாரதியை அவரது பிறந்தநாளில் நன்றியுள்ள தேசம் மிகுந்த மரியாதையுடன் நினைவு கூர்கிறது. மிகத்தீவிரமான மற்றும் உணர்ச்சிமிக்க சுதந்திர போராட்ட வீரர், புரட்சிக் கவிஞர், மிகச்சிறந்த இலக்கிய மேதை, பாலின பேதங்களைக் களைந்து, சமூக நீதியின் அடையாளமாகத் திகழும் சமூக சீர்திருத்தவாதியான பாரதி, ஒவ்வொரு பாரதியருக்கு உள்ளும் உத்வேகமூட்டும் சக்தியாக நீடிக்கிறார்.

அவரது வலிமையான எழுத்துக்கள் பல லட்சக்கணக்கானோரை சுதந்திர போராட்டத்தில் சேர ஊக்குவித்ததோடு, பாரதிய மொழிகள், ஆன்மிகம், கலாசாரம், மரபுகள் மற்றும் பாரம்பரியம் குறித்த ஆழமான பெருமையை மீட்டெடுத்தன. பாரதியாரின் வாழ்க்கை, லட்சியங்கள் மற்றும் தொலைநோக்கு ஒரேபாரதம் உன்னதபாரதம் என்ற நோக்கத்தை கட்டியெழுப்ப அசைக்க முடியாத உத்வேகத்தின் ஆதாரமாகத் தொடர்கின்றன. வளர்ச்சியடைந்த பாரதம்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 500 தாழ்தள மின்சார பஸ்கள் வாங்க டெண்டர் கோரியது போக்குவரத்துத்துறை



சென்னை, டிச.12

தமிழகத்தில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பஸ்களை இயக்கும் வகையில் ஜெர்மனி வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் சுமார் ரூ.7,492 கோடி மதிப்பில் 5 கட்டமாக பல்வேறு போக்குவரத்து கழகதிட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், சென்னை மாநகர போக்குவரத்துக்கழகத்தின் சார்பில் ரூ.22½ கோடியில் வாங்கப்பட்டுள்ள 25 தாழ்தள பஸ்களை மக்கள் பயன்பாட்டுக்காக கடந்த செப்டம்பர் மாதம் 9ம் தேதி அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிலையில், 12 மீட்டர் நீளமுள்ள 500 தாழ்தள மின்சார பஸ்கள் வாங்க தமிழ்நாடு போக்குவரத்துத்துறை டெண்டர் கோரியுள்ளது.

குளிர்சாதன வசதி இல்லாதது, குளிர்சாதன வசதி உள்ளது என்று இரு வகையாக பஸ்களை வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் 500 மின்சார தாழ்தள பஸ்களை இயக்க பணி ஆணை வழங்கப்பட்டுள்ளநிலையில், கோவை, மதுரை நகரங்களிலும் மின்சார பஸ்களை வாங்க டெண்டர் கோரப்பட்டுள்ளது.

# 1,958 நூலகங்களுக்கு வைபை வசதி சட்டசபையில் அமைச்சர் அன்பில் மகேஸ் தகவல்



சென்னை, டிச.12

சட்டசபையில் கேள்வி நேரத்தில் பா.ம.க. உறுப்பினர் அருள் (சேலம் மேற்கு), நூலகங்கள், போட்டி தேர்வுகள், சேலத்தில் அறிவு சார் மையம் எழுத்தாளர்களின் புத்தகங்களை அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என்று பல்வேறுகேள்விகளைமுன்வைத்தார். இதற்கு பதில் அளித்து பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியதாவது:

சேலம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 35 நூலகங்கள் முழுமையாக கட்டப்பட்டு வருகிறது. 6ம் வகுப்பில் இருந்து 12ம் வகுப்பு வரை மாநிலப் பாடத்திட்டத்தில் உள்ள புத்தகங்கள்தான் போட்டித்தேர்வுகளுக்குதேவையான, பொருத்தமான புத்தகம். கிட்டத்தட்ட 1,958 நூலகங்களுக்கு இது வரை 'வைபை' வசதி செய்யப்பட்டு உள்ளது. 108 நூலகங்களுக்கு தரமானவசதி செய்யப்பட்டு உள்ளது.

ஒட்டுமொத்த இந்தியாவிலேயே முதன் முறையாக ஆன்லைன் சம்பந்தமான வாசிப்பை மாநில அரசு கொண்டு வந்திருக்கிறது. கொள்முதலுக்காக 11 ஆயிரம் புத்தகங்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றில் கிட்டத்தட்ட 8,363 புத்தகங்கள் தற்போது தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. டிசம்பர் மாதத்திற்குள்ளாக அவை முழுமையாக கொள்முதல் செய்யப்படும்.

திருப்பத்தூர்,ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், தென்காசி போன்ற புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற மாவட்ட மைய நுலகங்களுக்கு தலா 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.



சட்டசபையில்விக்கிரவாண்டிசட்டமன்றஉறுப்பினர் அன்னியூர்சிவா.M.L.A உரையாற்றியதை முன்னிட்டு. விழுப்புரம் மாவட்ட பொறுப்பாளர் பொன் கௌதம சிகாமணி.,Ex.MP மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து பெற்று வாழ்த்து தெரிவித்தார்



விழுப்புரம் நகரம் வண்டிமேடு பகுதியைச் சேர்ந்த 200 குடும்பங்ளின் வீடுகள் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக பத்திர பதிவு நிறுத்தம் செய்யப்பட்டதை எதிர்த்து சென்னை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். அந்த வழக்கில் வெற்றி பெற்றதை தொடர்ந்து வண்டி மேடு வீடு உரிமையாளர்கள் நலச் சங்க செயலாளர் வாலிபால் மணி அவர்கள் தலைமையில் 100 க்கும் மேற்பட்டோர் இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்த விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி Dr. Gautham Sigamani அவர்கள் சந்தித்து தங்களது நன்றிகளை தெரிவித்தனர்.

# எடப்பாடி பழனிசாமி அரைத்த பொய்களையே அரைப்பதாக அமைச்சர் ரகுபதி கண்டனம்

சென்னை, டிச.12

எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி, அரைத்த பொய்களையே தொடர்ந்து அரைப்பதாகவும், பொய்களை எத்தனை முறை கூறினாலும் எடுபடாது எனவும் அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்து இருப்பதாவது. "அறிக்கைகளிலும் எக்ஸ் தளத்திலும் பேட்டிகளிலும் சட்டமன்றத்திலும் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி கொ ந் த ளி த் த குற்றச்சாட்டுகள் அனைத்தும் புஸ்வானமான நிலையில், இப்போது யூடியூப்பிலும் வந்து அதே புலம்பலை, அதே பொய்களைக் கடைப்பரப்ப ஆரம்பித்துவிட்டார்.

ஃபெஞ்சல் புயல், சாத்தனூர் அணைத் திறப்பு, பாலம் உடைப்பு, கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சிபிஐ விசாரணை உத்தரவு என அவருடைய சமீபத்திய பொய்களை எல்லாம் உடனுக்குடன் ஆதாரத்துடன் திமுக அரசு தவிடு பொடியாக்கியும்கூட, கொ ஞ் ச மும் கூச்சப்படாமல் அதே பொய்களை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார்."

வயிற்றெரிச்சலில்கூறிய பொய்களையே திரும்பத் திரும்ப எத்தனை முறை கூறினாலும் எடுபடாது. ஆயிரம் பொய்களைக் கூறினாலும் திராவிட மாடல்நல்லாட்சி மீது சிறு கீறல் கூட விழவைக்க முடியாது." இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# தியானலிங்கத்தை தரிசிக்க வேண்டும் என்ற ஏக்கம் நிறைவேறியது

## ஈஷாவில் தரிசனம் செய்த மாற்றுத் திறனாளிகள் குழு நெகிழ்ச்சி

கோவை , டிச.12

ஈஷா மையத்திற்கு ஆன்மீக பயணமாக 120 பேர் கொண்ட மாற்றுத் திறனாளிகள் குழு வருகை தந்தது. அங்கு எங்களைப் போன்றவர்களாலும் தியானலிங்கத்தைதரிசிக்கமுடியுமா என்ற ஏக்கம் தற்போது நிறைவேறியதாக அவர்கள் நெகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டனர்.



தமிழ்நாடு மாற்றத்திறனாளிகள் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் கோவை மாவட்ட அனைத்து வகை மாற்றத்திறனாளிகள் நலச்சங்கம் சார்பில் 120 பேர் ஈஷாவிற்கு வருகை புரிந்தனர். அவர்கள் சிரமங்கள் ஏதும் இல்லாமல் தரிசனம் செய்ய தேவையான சிறப்பு ஏற்பாடுகளை ஈஷா யோக மையம் செய்திருந்தது.

ஈ ஷ ா வி ல் தியானலிங்கம், லிங்கபைரவி ஆகிய இடங்களில் நூற்றுக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் தரிசனம் செய்தனர். அவர்களுக்கு இலவச யோகா வகுப்புகளும் நடத்தப்பட்டன.

இது குறித்து தவழும் மாற்றுத்திறனாளி பாஸ்கர் கூறுகையில், "ஈஷா போன்ற பிரபலமான இடங்களுக்கு தவழும் மா ற் று த் தி ற னா ளி க ள் சென்று வருவது மிகவும் சிரமம் என்றே இதுவரை நினைத்திருந்தேன். பல முறை வெளியில் மட்டுமே நின்று வந்துள்ளேன். நம்மை போன்றவர்களால் தியானலிங்கத்தைபார்க்கமுடியாதா என்று கூட பல முறை நினைத்து இருக்கிறேன்.

ஆனால் நேற்று ஈஷாவில் எங்களை அழைத்துச் சென்ற விதமும், அங்குள்ள ஆன்மீகப் பணியாளர்களின் தூய்மையான அன்பும், மிகவும் சிறப்பானதாக இருந்தது. எந்தவித சிரமமும் இல்லாமல் கோவிலின் அனைத்து இடங்களையும் எங்களுக்கு சுற்றிக்காட்டினர் என அவர் கூறினார்.

பார்வை மாற்றுத்திறனாளியான மணிகண்டன் கூறுகையில், "ஈஷா சென்று வந்த பயணம் மனத்திற்கு மிகவும் நிறைவானதாக இருந்தது. நாங்கள் கேட்ட வசதிகள் அனைத்தையும் ஈஷாவில் முழுமையாக ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. ஈஷா தன்னார்வலர்கள் எங்கள் மாற்றுத்திறனாளி சகோதர சகோதரிகளை மிகவும் சிறப்பாக வழி நடத்தினார்கள்.

அவர்கள் அனைவருக்கும் கோவை மாவட்ட அனைத்து வகை மாற்றத்தினாளிகள் நலச்சங்கத்தின் சார்பிலும் எல்லோரது சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்." என அவர் கூறினார்.

# 'ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுபகுதி' புயலாக மாறுமா?

சென்னை, டிச.12

தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகையை ஒட்டிய கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்ததாழ்வு பகுதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றது.

இதன் காரணமாக தமிழ்நாட்டில் அனேக இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் இது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி நகர்ந்து செல்லும்போது சில இடங்களில் கனமழை பெய்யும் என இந்திய வானிலை மையத்தின் தென்மண்டல தலைவர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி புயலாக உருவாக வாய்ப்பு இல்லை. வடகிழக்கு பருவமழை இயல்பை விட 14% அதிகம் பெய்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




விழுப்புரம் மாவட்டம் கானை ஒன்றியம் அரசு உயர்நிலைப்பள்ளி கஞ்சனூர் வளாகத்தில் திருவள்ளுவர் உருவம் கைகள் உடைந்து நிலையில் பள்ளி ஆசிரியர்கள் கண்டும் காணாமல் மாணவர்களுக்கு பாடம் புகட்டுவது பார்ப்போர் மனது வேதனையாக உள்ளது இனியாவது பள்ளி மேலாண்மை குழு மூலம் விழுப்புரம் மாவட்ட கல்வி அலுவலர் பார்வைக்கு கொண்டு செல்வார்களா என பொறுத்திருந்து பார்ப்போம்

# தவெக மாநாட்டுக்கு சென்று மாயமான இளைஞரை தேடும் பணி தீவிரம் ஐகோர்ட்டில் போலீஸ் தகவல்

சென்னை, டிச.12

தமிழக வெற்றிக்கழகத்தின் மாநில முதல் மாநாடு அக்டோபர் மாதம் 27ந்தேதி விக்கிரவாண்டி வி.சாலையில் நடைபெற்றது. தமிழக அரசியலே உற்று நோக்கிய இந்த மாநாட்டில்சுமார்8லட்சத்திற்கும்மேற்பட்ட தொண்டர்கள், பொதுமக்கள் என கூடினர். இதனால் விக்கிரவாண்டி தொகுதியே ஸ்தம்பித்தது. இந்த நிலையில், தமிழக வெற்றிக்





கழக மாநாட்டுக்கு சென்று மாயமான மேகநாதனை மீட்டுத்தரக்கோரி அவரது தந்தை சென்னை உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்து இருந்தார்.

இந்த மனுவை மீதான விசாரணையின் போது, மாநாட்டிற்கு சென்ற இளைஞரை சென்னை, புதுச்சேரி உள்ளிட்ட பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. மாயமானவர் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக சென்னை உயர்நீதி மன்றத்தில் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தருமபுரியில் ஆதரவின்றி தவித்த 2 குழந்தைகளை போலீசார் மீட்டனர்



தருமபுரி, டிச.12

தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று இரவு 2 குழந்தைகள் யாருடைய அரவணைப்பின்றி சுற்றித் திரிந்தனர்.

நீண்ட நேரமாக 2 குழந்தைகளும் சுற்றி வந்ததால் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள்சந்தேகம்அடைந்து தருமபுரி டவுன் போலீஸ் நிலையத்திற்கு புகார் தெரிவித்தனர்.

தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டர் வேலுதேவன் மற்றும் போலீசார்2குழந்தைகளை அழைத்து விசாரணை செய்ததில், தருமபுரி மாவட்டம் பென்னாகரம் அடுத்த ஏரியூர் பகுதியைச் சேர்ந்த சேட்டுநந்தினி தம்ப தி யி ன ரின் குழந்தைகளான ராகவஸ்ரீ(5), முகேஸ்(3) என்பது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து குழந்தைகளை மருத்துவமனையில் விட்டுச் சென்றவர் யார்? என்பது குறித்து சி.சி.டி.வி. கேமராவில் பதிவான காட்சிகளில் ஆய்வு செய்தனர்.

இதில் குழந்தைகளின் தாயார் நந்தினியே மருத்துவமனையில் குழந்தைகளை விட்டுச்சென்றது தெரியவந்தது. தொடர்ந்து இந்த குழந்தைகளின் உறவினருக்கு போலீசார் தகவல் தெரிவித்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்குவிரைந்துவந்த நந்தினியின் அண்ணன் பாலாஜியிடம் 2 குழந்தைகளையும் போலீசார் பத்திரமாக ஒப்படைத்தனர்.

மேலும் போலீசார் விசாரணை நடத்தியதில் சேட்டுக்கும், நந்தினிக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து இருப்பதும், இதனால் தாயார் நந்தினி தனது 2 குழந்தைகளை மருத்துவமனையில் விட்டுச் சென்றதும் விசாரணையில் தெரியவந்தது.

இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பதிவுத்துறை அலுவலர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலை: தி.மு.க. அரசுக்கு ஓ.பி.எஸ். கண்டனம்

சென்னை, டிச.12

முன்னாள் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

அரசு மருத்துவர்கள், அரசு ஊழியர்கள், காவல் துறையினர், வருவாய்த் துறையினர் என்ற வரிசையில் தற்போது பதிவுத் துறை அலுவலகங்களில் பணிபுரியும் சார் பதிவாளர்கள் மற்றும் இதர அலுவலர்களுக்கும் பாதுகாப்பில்லாத சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது.



கடந்த வாரம், கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஒரு குறிப்பிட்ட ஆவணத்தை சார் பதிவாளர் பதிவு செய்ய மறுத்த நிலையில், ஆத்திரமடைந்த அந்த நபர் தானும் மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு, சார் பதிவாளர் மீதும் ஊற்றி கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதே போன்று, மதுரைமாவட்டம்,பேரையூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரத்தை பதிய மறுத்த சார் பதிவாளர் தாக்கப்பட்டு அவருக்குதலையில் படுகாயம் ஏற்பட்டு இருக்கிறது.

எனவே, பதிவுத்துறை அலுவலர்கள் தங்கள் பாதுகாப்பினை வலியுறுத்தி, நேற்று கருப்பு பேட்ஜ் அணிந்துதங்கள்உணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். முதலமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு, பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்களில் காவல் துறை மூலம் உரிய பாதுகாப்பு ஏற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மன்னர் ஆட்சியை துடைத்தெரியும் காலம் வந்துவிட்டது அண்ணாமலை



நாகப்பட்டினம், டிச.12

நாகையில் இன்று மதியம் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

மதுரை பகுதி மக்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கக்கூடிய டங்ஸ்டன் சுரங்கம் அமைவது குறித்து தி.மு.க. எம்.பி.க்கள் மத்திய அரசுக்கு எந்தவித மான அழுத்தமும் கொடுக்கவில்லை.

ஆனால், நாங்கள் இதுகுறித்து மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வோம். வருகிற 12ந்தேதி டெல்லி செல்கிறோம். திரும்பி வரும்போது நிச்சயம் வெற்றி செய்தியோடு வருவோம் என்றார்.

தி.மு.க. கூட்டணியில் ஏ ற் ப ட் டு ள் ள குழப்பத்தை, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச்செயலாளர் மேடை ஏறி முதலமைச்சர் குறித்து பேசி உள்ளார். இதனை கேட்ட மக்கள்விழித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு குடும்பத்தின் கையில் ஆட்சியின் பிடி இருக்கிறது.

மன்னர் ஆட்சி என்றால் தந்தைக்கு பின்னால் மகன், மகனுக்கு பின்னால் மகன் என்பது தான். அவர்களை துடைத்தெரியும் காலம் வந்துவிட்டது. ஆதவ் அர்ஜுனா பேச்சும், வி.சி.க. தலைவர் பேச்சும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

# திருவண்ணாமலை நாளை உள்ளூர் விடுமுறை அறிவிப்பு

திருவண்ணாமலை, டிச.12



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் பாஸ்கரன் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகரம் அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோவிலில் கார்த்திகை மகா தீபத் திருவிழா நாளான 2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13ம் நாள் வெள்ளிக்கிழமை அன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மாநில அரசின் ஆளுகைக்கு உட்பட்டு இயங்கும் அனைத்து அலுவலகங்களுக்கும்,கல்விநிறுவனங்களுக்கும் (தேர்வுகளுக்கு இடையூறு இல்லாமல்) அரசு சார்புடைய நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்படுகிறது.

மேலும்2024ம்ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் நாளை உள்ளூர் விடுமுறையாக அனுபவிக்கும் மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து அலுவலகங்களும் மேற்படி அறிவிக்கப்பட்ட உள்ளூர் விடுமுறைக்கு பதிலாக 2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21 ஆம் நாள் சனிக்கிழமை அன்று இயங்கும். மேலே அறிவிக்கப்பட்ட உள்ளூர் விடுமுறை தினம் மாற்றியல் தாள்முறி கூடம் 1881 (மத்திய சட்டம் XXVI/1881) ன கீழ் வரும் பொது விடுமுறை இல்லை என்பதால், 2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13ஆம் நாளன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மாவட்ட கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்கள் அனைத்தும் குறைந்தபட்ச எண்ணிக்கையுடனான ஊழியர்களைக் கொண்டு இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை விசாகப்பட்டினம் சிறப்பு ரெயிலில் கூடுதல் பெட்டிகள்: தெற்கு ரெயில்வே அறிவிப்பு

சென்னை, டிச.12

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

விசாகப்பட்டினத்தில் இருந்து சென்னை எழும்பூர் வரும் சிறப்பு ரெயிலில் (வண்டி எண்.08557), வரும் 14ந்தேதி முதல் மார்ச் 1ந்தேதி வரையில் கூடுதலாக ஒரு 3ம் வகுப்பு ஏ.சி.பெட்டியும், ஒரு படுக்கை வசதி பெட்டியும் இணைக்கப்பட உள்ளது.

மறுமார்க்கமாக, சென்னை எழும்பூரில் இருந்து விசாகப்பட்டினம் செல்லும் சிறப்பு ரெயில் (08558), வரும் 15ந்தேதி முதல் மார்ச் 2ந்தேதி வரையில் கூடுதலாக ஒரு 3ம் வகுப்பு ஏ.சி.பெட்டியும், ஒரு படுக்கை வசதி பெட்டியும் இணைக்கப்பட உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# விசிக பிரமுகர் விஷம் குடித்து தற்கொலை



விழுப்புரம், டிச.12

விழுப்புரம் மாவட்டம் மயிலம் அருகே சின்ன வளவனூர் காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் ஆறுமுகம் மகன் மகேஷ். ஆட்டோ டிரைவரான இவர் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மயிலம் மத்திய ஒன்றிய துணை செயலாளராக இருந்து வந்தார்.

இந்த நிலையில் மகேசும், அவரது மனைவி சுகுணாவும் கருத்து வேறுபாடு காரணமாக சுமார் 3 ஆண்டுகள் பிரிந்து வாழ்ந்து வருவதாக கூறப்படுகிறது. இதனால் மன முடைந்து காணப்பட்ட மகேஷ் சம்பவத்தன்று வீட்டில் இருந்த பூச்சி மருந்தை (விஷம்) எடுத்து குடித்து மயங்கி விழுந்தார்.

இதைப்பார்த்த அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு சிகிச்சைக்காக கேணிப்பட்டு பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலன் இன்றி மகேஷ் பரிதாபமாக இறந்தார்.

இது குறித்து மயிலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# கோவில் வளாகத்தில் கற்பூரம் ஏற்ற தடை

திருவண்ணாமலை, டிச.12

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் முக்கிய திருவிழாவான கார்த்திகை தீபத் திருவிழா கொண்டாட்டம் தொடங்கி உள்ளது. அந்த வகையில் திருவண்ணாமலை கோவிலின் முக்கிய உற்சவங்களில் ஒன்றான மகாதேரோட்டம் நடைபெற்று வருகிறது. மேலும் வருகிற 13ம் தேதி அண்ணாமலையார் கோவில் கருவறையில் அதிகாலை 4 மணிக்கு பரணி தீபமும், அன்றைய தினம் மாலை 2ஆயிரத்து 668 அடி உயர மலையின் மீது மகாதீபமும் ஏற்றப்பட உள்ளது. இதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் பரணி தீபத்தை காண லட்சக்கணக்கான மக்கள் கூட உள்ளனர். திருவண்ணாமலையில் இன்று திருத்தேரோட்டம் நடைபெறும் நிலையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளதால் கோவில் வளாகத்தில் கற்பூரம் ஏற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது. திருத்தேரோட்டத்தை ஒட்டி மாடவீதியில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வடக்கு மண்டல ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில் 6 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் அங்கு ஈடுபட்டுள்ளனர். முன்னதாக திருவண்ணாமலை கார்த்திகை மகா தீப திருவிழாவையொட்டி, கிரிவலம் தொடர்பாக பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளை காவல் துறை வெளியிட்டிருந்தது. அதன்படி திருவண்ணாமலைக்கு வரும் பக்தர்களுக்கு நீர் மோர் வழங்குதல், ஆசிர்வதித்தில் என்ற போர்வையில் ஏமாற்றியும், மிரட்டியும் பணம் வசூலிப்பது, குற்றம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் நான்கு கோபுரங்களுக்கு முன்பாகவோ, கிரிவலப்பாதையிலோ கற்பூரம் ஏற்றக்கூடாது. கால்நடை உரிமையாளர்கள், கால்நடைகளை கிரிவலப்பாதையில் உலவ விடக்கூடாது. உரிய அனுமதியின்றி அன்னதானம் வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட இடங்களிம் மட்டுமே அன்னதானம் வழங்க வேண்டும். பக்தர்கள் கிரிவல பாதையை ஒட்டியுள்ள நீர்நிலைகளுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும். அனுமதியின்றி வனப்பகுதியில் பிரவேசிப்பதும், மலையின் மீது ஏற முயற்சிப்பது குற்றம். அவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் மழைநீர் வடிகால் பணியின்போது மின்சாரம் தாக்கி வாலிபர் உயிரிழப்பு

சென்னை, டிச.12

சென்னை மயிலாப்பூர், வீரபெருமாள் கோவில் தெருவில் கடந்த சில மாதங்களாக மழைநீர் வடிகால் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பணிகளில் ஏராளமான வடமாநிலத்தை சேர்ந்தவர்கள் வேலை செய்து வருகின்றனர்.

5க்கும் மேற்பட்ட வட மாநில தொழிலாளர்கள் மழைநீர் வடிகால்வாய் பணியில் ஈடுபட்டு வந்தனர். அப்போது மிலன் தாஸ் (வயது 19) என்பவர் சென்டிரிங் அமைப்பதற்காக இரும்பு கம்பிகளை வெல்டிங் எந்திரம் மூலம் துண்டிக்கும் பணியை செய்துகொண்டிருந்ததாக தெரிகிறது.

அப்போது எதிர்பாராத விதமாக அவரை மின்சாரம் தாக்கியது. இதில் தூக்கி வீசப்பட்டதில் மயங்கி விழுந்த அவரை சக பணியாளா்கள் மீட்டு ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் மிலன்தாஸ் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து மயிலாப்பூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரனை மேற்கொண்டு வருகின்றனர்.

# சென்னை மயிலாப்பூர்: பறக்கும் ரெயில் மேம்பாலத்தில் இருந்து தள்ளிவிட்டு ஒருவர் கொலை

சென்னை, டிச.12

சென்னை மயிலாப்பூரில் உள்ள பறக்கும் ரெயில் மேம்பாலத்தின் மேல் இருவருக்கு இடையே மோதல் ஏற்பட்டதாக தெரிகிறது. மோதல் முற்றியதில் பறக்கும் ரெயில் மேம்பாலத்தில் இருந்து ஒருவர் தள்ளிவிடப்பட்டார்.

இந்நிலையில் இருவருக்கிடையே ஏற்பட்ட மோதலில் மேம்பாலத்தில் இருந்து கீழே தள்ளிவிட்ட போது படுகாயமடைந்த பட்டினப்பாக்கத்தை சேர்ந்த லூயிஸ் பத்தியாஸ் (40) என்பவர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த கொலை சம்பவம் தொடர்பாக திருவான்மியூர் ரெயில்வே போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# நிலச்சரிவு அபாயம் எதிரொலி: லாடபுரம் மயிலூற்று அருவிக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு திடீர் தடை



பெரம்பலூர், டிச.12

பெரம்பலூர் மாவட்டத்துடன் மேற்கு எல்லையாகவுள்ள பச்சைமலைத் தொடர்ச்சியில் மலையாளப்பட்டி அருகே எட்டெருமைப்பாழி அருவி, தொண்டமாந்துறை அருகே கோரையாறு அருவி, பூலாம்பாடி அருகே இரட்டைப் புறா அருவி போன்றவை உள்ளன.

அதுப்போல லாடபுரம் மயிலூற்று அருவியும் பிரசித்தி பெற்றது. லாடபுரத்தின் அருகேயுள்ள பச்சைமலையில், பாறை மீதிருந்து அருவியாகக் கொட்டுகிற மழைநீர், பாறை மீது அமர்ந்துள்ள மயில் தனது தோகையை விரித்துத் தொங்க விட்டது போல் காணப்பட்டதால் இந்த அருவிக்கு மயிலூற்று அருவி எனப் பெயர்வந்ததாகக்கூறப்படுகிறது.

லாடபுரம் அருவிக்கு லாடபுரத்தில் இருந்து, சரவணபுரம் வழியாக பைக் கிலோ, காரிலோ 3 கிமீ தூரம் சென்றபிறகு 10 நிமிடத்தில் பால்போல் கொட்டும் அருவிக்குச் சென்று விடலாம் என்பதாலேயே எளிதில் சுற்றுலா அந்தஸ்து பெற்றுத் திகழ்கிறது.

இந்த நிலையில் தமிழ்நாடு அரசு வனத்துறையால் அனுமதி வழங்கப்பட்ட மலையேற்ற பாதைகள் பட்டியலின் படி லாடபுரம் மயிலூற்று அருவி மலையேற்ற பாதைக்கு அனுமதி வழங்கப்படவில்லை. மேலும் பெரம்பலூர் வனச்சரகம், மயிலூற்று அருவி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்குள் இருப்பதால் கரடு முரடான மலைப்பாதை வழியாக மேலே ஏறிச்செல்லும் போது நிலச்சரிவு ஏற்பட்டு விபத்துகள் ஏற்படலாம்.

மலைப்பகுதிகளில் பெய்யும் கனமழையின் காரணமாக அருவிப்பகுதிகளில் நீர்வரத்து அதிகமாக வரும்போது அபாயகரமான நிலச்சரிவு மற்றும்பாறைகள்உருண்டு வந்து உயிர் சேதத்தை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது. எனவே பொதுமக்களின் பாதுகாப்பு நலன்கருதி அருவி பகுதிகளில் சென்று பொதுமக்கள் குளிப்பதற்கு பெரம்பலூர் மாவட்ட வனத்துறையால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடையை மீறி உள்ளே செல்பவர்கள் மீது தமிழ்நாடு வனச்சட்டம் 1882 பிரிவு 22 (டி)ன் படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும், என்று பெரம்பலூர் மாவட்ட வனத்துறை சார்பில் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மினிபஸ் டிரைவர் கொலை வழக்கு: அய்யம்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் பணியிடை நீக்கம்

தஞ்சாவூர், டிச.12

தஞ்சாவூர் மாவட்டம் அய்யம்பேட்டையை அடுத்த பசுபதிகோவில் திரவுபதியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் சிவசங்கர் மகன் சிவமணிகண்டன் (வயது 28).

இவர் அப்பகுதியில் கஞ்சா விற்பனை செய்யும் நபர்கள் குறித்து அய்யம்பேட்டை போலீஸ் நிலையத்தில் கடந்த 6ம் தேதி இரவு புகார் அளித்தார். இந்நிலையில் 7ம் தேதி மாலை 5 மணிக்கு அய்யம்பேட்டை பஸ் நிறுத்தம் அருகே சிவ மணிகண்டன் நடுரோட்டில் கொடூரமாக வெட்டி கொலை செய்யப்பட்டார்.

கஞ்சா விற்பவர்கள் குறித்து போலீசில் புகார் அளித்ததன் காரணமாக சிவமணிகண்டன்வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளதாக அவர்களது உறவினர்கள் குற்றம்சாட்டினர்.

மேலும் புகார் அளித்த சமயத்தில் குற்றவாளிகளை கைது செய்திருந்தால் கொலையை தடுத்து நிறுத்தி இருக்கலாம் எனவும் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் இந்த கொலை சம்பவத்தில் ஈடுபட்ட முக்கிய குற்றவாளிகள் 3 பேர் ஜெயங்கொண்டம் குற்றவியல் கோர்ட்டில் சரணடைந்தனர். மேலும் கொலைக்கு உடந்தையாக இருந்த சிறுவன் உள்பட 4 பேரை அய்யம்பேட்டை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் கொலை செய்யப்பட்ட சிவ மணிகண்டன் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காமல் விட்டதன் காரணமாக தான் குற்றவாளிகள் கொலை சம்பவத்தை அரங்கேற்றி இருப்பதாகவும், புகார் கொடுத்தும் உரிய நடவடிக்கை எடுக்காத அய்யம்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் ரவிமதியை பணி இடை நீக்கம் செய்து, தஞ்சைசரக டி.ஐ.ஜி. ஜியாஉல்ஹக் உத்தரவிட்டுள்ளார்.

# வெள்ள நிவாரணம் வழங்கக் கோரி பொதுமக்கள் மறியல்: போலீசாருடன் தள்ளுமுள்ளு



சேதராப்பட்டு, டிச.12

புதுவை அருகே அரசு நிவாரண தொகை வழங்காததை கண்டித்து கிழக்கு கடற்கரை சாலையில் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டதால் பள்ளி மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

புதுச்சேரி அடுத்த தமிழகபகுதியானவிழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட பெரியக்கோட்டகுப்பம் பகுதியில் 10 மற்றும் 11 வது வார்டு உள்ளது. பெஞ்ஜல் புயல் மற்றும் கனமழைக்கு இந்தப் பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது.

பாதிக்கப்பட்ட மக்களை அதிகாரிகள் வந்து பார்வையிடவில்லை எனவும், புயல் நிவாரணமாக தமிழக அரசு அறிவித்த ரூபாய் 2 ஆயிரம் தொகை மற்றும் அரிசி உள்ளிட்ட மளிகை தொகுப்பு இந்த இரண்டு வார்டு பகுதிகளை சேர்ந்த மக்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் குற்றச்சாட்டு எழுந்தது.

இதுகுறித்து இந்த பகுதி மக்கள் நேற்று இரவு ஆலோசனைக் கூட்டம் நடத்தி சாலை மறியல் போராட்டம்நடத்தமுடிவு செய்தனர்.

அதன்படி இன்று காலை 6.30 மணிக்கு கோட்டகுப்பம் ரவுண்டானா கிழக்கு கடற்கரைசாலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் திரண்டு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் அரை மணி நேரத்திற்கு மேலாக மறியல் போராட்டம் தீவிரமடைந்தது.

அப்போது அரையாண்டு தேர்வு எழுதுவதற்காக மாணவர்கள் தனியார் பள்ளி பஸ்சில் வந்த நிலையில் மறியல் போராட்டத்தால் சுமார் 30க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்களின் பஸ் நிறுத்தப்பட்டது.

ஆட்டோக்களில் வந்த பள்ளி மாணவர்களும் மறியலில் சிக்கித் தவித்தனர். காலாப்பட்டு பகுதியில் இருந்து புதுச்சேரி நோக்கி வந்த கனரக வாகனங்கள் அரசு பஸ்கள் சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு அணிவகுத்து நின்றது.

கோட்டகுப்பம் ரவுண்டானாவில் இருந்து சிவாஜி சிலை வரை போக்குவரத்து ஸ்தம்பித்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், பெஞ்ஜல் புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டு குடியிருப்புகளுக்குள் மழை நீர் புகுந்து வீடுகள் சேதம் அடைந்தது. மொத்தம் உள்ள 27 வார்டுகளில் 16 வார்டுகளுக்கு மட்டுமே நிவாரணத் தொகையை அரசு அறிவித்துள்ளது.

10 மற்றும் 11வது வார்டு பகுதியில் சேதம் மதிப்பு குறித்து கணக்கெடுப்பு கூட நடத்தப்படவில்லை. முற்றிலும் 2 பகுதி மக்களும் நிவாரணத் தொகை கிடைக்கவில்லை. நகராட்சி நிர்வாகம் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும் அரசு நிவாரணத்திற்கான எந்த அறிவிப்பு வெளியிடவில்லை.

அதிகம் பாதிக்கப்பட்ட எங்கள் பகுதி மக்களுக்கு உடனே தமிழக அரசு வழங்கும் நிவாரண நிதியை பாதிப்புக்கு ஏற்றார் போல் வழங்க வேண்டும். இல்லையென்றால் தொடர்ந்து போராட்டம் நடத்துவோம் என கோஷங்கள் எழுப்பினர்.

தேர்வுக்காக காத்திருக்கும் மாணவர்களுக்காக வழி விடுங்கள் என கோட்டகுப்பம் இன்ஸ்பெக்டர் விஸ்வநாதன் கேட்டுக் கொண்டதன் பேரில் பள்ளி வாகனங்களை மட்டும் போராட்டக்காரர்கள் விரைவாக செல்ல அனுமதித்தனர்.

பின்னர் மீண்டும் சாலை மறியல் ஈடுபட்ட அவர்களிடம் கோட்டக்குப்பம் துணை போலீஸ் வந்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது பொது மக்கள் தங்களுடைய பாதிப்புகளை கண்ணீர் மல்க தெரிவித்தனர்.

அப்போது போலீசாருக்கும் மறியல் ஈடுபட்ட ஒரு சில இளைஞர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதால் தள்ளுமுள்ளு நடந்தது. இதனால் கோட்டக்குப்பம் ரவுண்டான பகுதி பெரும் பரபரப்பாக காணப்பட்டது.

சுமார் 1:30 மணி நேரம் நடந்த மறியல் போராட்டத்தில் அந்த வழியாக அலுவலகம் சென்றவர்கள் சென்னை சென்றவர்கள் பாதிக்கப்பட்டனர். அப்போது போலீசார் வருவாய்த்துறை அதிகாரியிடம் போன் மூலம் தகவல் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட 2 வார்டு மக்களுக்கும் அரசு வழங்கும் நிவாரணத் தொகையை வழங்குவதாக2 வார்டு பெயர்களையும் நிவாரண பட்டியலில் இடம் பெறச் செய்தனர். இதனை போலீசார் பொதுமக்களிடம் காண்பித்தனர். இதன் அடிப்படையிலேயே பொதுமக்கள் தற்காலிகமாக தங்கள் மறியல் போராட்டத்தை கைவிட்டு சென்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் கிழக்கு கடற்கரை பகுதியில் அமைந்துள்ள கோட்டக்குப்பம் பெஞ்ஜல் புயலால் பெரிதும் பாதிக்கப்பட்டது. தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் முகாமிட்டு 50க்கும் மேற்பட்ட நபர்களை படகுமூலம் மீட்டனர்.

ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் வெள்ள நீரில் சூழ்ந்து பாதிக்கப்பட்டது. நிறைய கால்நடைகள் இறந்து போயின. நான்கு நாட்களாக மின்சாரம் இன்றி பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியது.

எனவே கோட்டகுப்பம் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்கும் தமிழக அரசின் நிவாரணப் பொருட்களை உடனே வழங்க கோரி சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

# சதுரங்கப்பட்டினம் அரசு மருத்துவமனையை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம்



செங்கல்பட்டு, டிச.12

செங்கல்பட்டு மாவட்டம் சதுரங்கப்பட்டினம் அரசு மருத்துவமனையில் செவிலியர்கள் பிரசவம் பார்த்ததில் குழந்தை உயிரிழந்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. கல்பாக்கம் அடுத்த வாயலூர் பகுதியை சேர்ந்தவர் சுஜாதா என்பவருக்கு பிரசவ வலி ஏற்பட்டதை அடுத்து சதுரங்கப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மருத்துவர் இல்லாததால் செவிலியர் பிரசவம் பார்த்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து அதிக மூச்சு திணறல் ஏற்பட்டதால் அதிகாலை 3 மணியளவில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சுஜாதாவை அழைத்து செல்லும்படி செவிலியர்கள்கூறியுள்ளனர். இதனை தொடர்ந்த செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சுஜாதாவுக்கு குழந்தை இறந்த நிலையில் பிறந்துள்ளது. இதனால் ஆத்திரம் அடைந்த குழந்தையின் தந்தை மற்றும் உறவினர்கள் சதுரங்கப்பட்டினம் அரசு மருத்துவமனையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# சென்னை முக்கிய நகரங்களில் இருந்து திருவண்ணாமலைக்கு 10 ஆயிரம் சிறப்பு பஸ்கள்

சென்னை, டிச.12

கார்த்திகை தீபம் மற்றும் பவுர்ணமியையொட்டி அரசு போக்குவரத்துக்கழகம் மூலம் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன. கார்த்திகைதீபம் 12ந்தேதியும் பவுர்ணமி 14ந்தேதியும் கொண்டாடப்பட உள்ள நிலையில் திருவண்ணாமலைக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பக்தர்கள் செல்ல வசதியாக சிறப்பு பஸ்கள் 12ந்தேதி முதல் 15ந் தேதி வரை 4 நாட்கள் இயக்கப்படுகிறது.

சென்னையில் இருந்து திருவண்ணாமலைக்கு 1982 பஸ்களும், சேலம், வேலூர், காஞ்சிபுரம், புதுச்சேரி, கும்பகோணம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் பிற இடங்களில் இருந்து 8127 பஸ்களும் என மொத்தம் 10,109 பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

சென்னையில் இருந்து 12ந் தேதி 269, 13ந்தேதி 643, 14ந்தேதி 801, 15ந்தேதி 269 பஸ்கள் திருவண்ணாமலைக்கு விடப்பட்டு உள்ளது.

தொலை தூரங்களுக்கு இயக்கப்படும் சிறப்பு பஸ்களுக்கு www.tnstc.in மற்றும் tnstcofficial app. ஆகிய இணையதளங்களின் மூலமாக இருபுறமும் முன்பதிவு செய்து பயணிக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. எனவே திருவண்ணாமலை செல்லும் பக்தர்கள் மேற்படி பஸ் வசதியினை பயன்படுத்தி கொள்ளும்படி அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குனர் மோகன் தெரிவித்துள்ளார்.

# நீலகிரியில் மொட்டு காளான் மகசூல் அதிகரிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி



சங்ககிரி, டிச.12

ராமநாதபுரத்தைச் சேர்ந்தவர் லாரி டிரைவர் செல்வம் (40). இவர் கண்டெய்னர் லாரியில் சத்தியமங்கலத்தில் இருந்து ரூ.6 லட்சத்து 50 ஆயிரம் மதிப்புள்ள பஞ்சு லோடு ஏற்றிக்கொண்டு ஐதராபாத் நோக்கி சென்றார். இரவு 7 மணி அளவில் பவானி சேலம் செல்லும் நெடுஞ்சாலையில் சங்ககிரி வி.என். பாளையம் என்ற இடத்தில் டிரைவர் செல்வம் லாரியை நிறுத்தி விட்டு கீழே இறங்கி லாரியின் சக்கரங்களில் காற்று சரியாக உள்ளதா? என சரிபார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது திடீரென லாரியின் உள்பகுதியில் இருந்து தீப்புகை வருவதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

உடனே அக்கம் பக்கத்தினர் உதவியுடன் சங்ககிரி தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். நிலைய அதிகாரி ரமேஷ் குமார் தலைமையிலான மீட்பு படையினர் விரைந்து வந்து லாரியின் பின் கதவுகளை திறந்து தண்ணீர் பாய்ச்சி தீ பரவாமல் தடுத்தனர். மேலும் லாரியில் இருந்த பஞ்சுலோடுகளை கீழே இறக்கி தீப்பிடித்த பேல்களைதண்ணீர்ஊற்றி அணைத்தனர். இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

லாரியில் தீப்புகை ஏற்பட்ட இடத்தின் அருகே தனியார் பெட்ரோல் பங்க் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த சங்ககிரி போலீசார் வாகனங்களை மாற்றுப்பாதையில் திருப்பி அனுப்பி போக்குவரத்தை சீர் செய்தனர். மேலும் லாரியில் ஏற்பட்ட தீவிபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இரவு நேரத்தில் பஞ்சு லோடு ஏற்றி சென்ற லாரியில் திடீரென தீப்புகை ஏற்பட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# சங்ககிரி அருகே பஞ்சு ஏற்றி சென்ற லாரியில் திடீர் தீ விபத்து



சங்ககிரி, டிச.12

ராமநாதபுரத்தைச் சேர்ந்தவர் லாரி டிரைவர் செல்வம் (40). இவர் கண்டெய்னர் லாரியில் சத்தியமங்கலத்தில் இருந்து ரூ.6 லட்சத்து 50 ஆயிரம் மதிப்புள்ள பஞ்சு லோடு ஏற்றிக் கொண்டுஐதராபாத் நோக்கி சென்றார். இரவு 7 மணி அளவில் பவானி சேலம் செல்லும் நெடுஞ்சாலையில் சங்ககிரி

வி.என். பாளையம் என்ற இடத்தில் டிரைவர் செல்வம் லாரியை நிறுத்தி விட்டு கீழே இறங்கி லாரியின் சக்கரங்களில் காற்று சரியாக உள்ளதா? என சரிபார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது திடீரென லாரியின் உள்பகுதியில் இருந்து தீப்புகை வருவதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

உடனே அக்கம் பக்கத்தினர் உதவியுடன் சங்ககிரி தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். நிலைய அதிகாரி ரமேஷ் குமார் தலைமையிலான மீட்பு படையினர் விரைந்து வந்து லாரியின் பின் கதவுகளை திறந்து தண்ணீர் பாய்ச்சி தீ பரவாமல் தடுத்தனர். மேலும் லாரியில் இருந்த பஞ்சு லோடுகளை கீழே இறக்கி தீப்பிடித்த பேல்களை தண்ணீர் ஊற்றி அணைத்தனர். இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

லாரியில் தீப்புகை ஏற்பட்ட இடத்தின் அருகே தனியார் பெட்ரோல் பங்க் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த சங்ககிரி போலீசார் வாகன ங்களை மாற்றுப்பாதையில் திருப்பி அனுப்பி போக்குவரத்தை சீர் செய்தனர். மேலும் லாரியில் ஏற்பட்ட தீவிபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இரவு நேரத்தில் பஞ்சு லோடு ஏற்றி சென்ற லாரியில் திடீரென தீப்புகை ஏற்பட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளின் நீர்மட்டம் 74 சதவீதம் உயர்ந்தது



சென்னை, டிச.12

ஃபெஞ்சல் புயல் காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் பலத்த மழை கொட்டியது. இதனால் சென்னைக்கு குடிநீர்வழங்கும் முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்கும் பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம், கண்ணன்கோட்டை ஆகிய 5 ஏரிகளிலும் தண்ணீர் இருப்பு 74.32 சதவீதம் உயர்ந்துள்ளது.

இந்த ஏரிகளின்மொத்த கொள்ளளவு 11.757 டி.எம்.சி. ஆகும். நேற்று காலை நிலவரப்படி குடிநீர் ஏரிகளில் தண்ணீர் இருப்பு 8.738 டி.எம்.சி. ஆக உள்ளது. பூண்டி ஏரியின் உயரம் 35 அடி ஆகும். இதில் நீர்மட்டம் 33 அடி தாண்டி உள்ளது. இதன் மொத்த கொள்ளளவு 3.231 டி.எம்.சி.யில் 2.573 டி.எம்.சி. தண்ணீர் உள்ளது. ஏரிக்கு வினாடிக்கு 1,530 கனஅடி தண்ணீர்வந்து கொண்டிருக்கிறது. புழல் ஏரியில் மொத்த கொள்ளளவு ஆன 3.300 டி.எம்.சி. யில் 2.755 டி.எம்.சி.யும், சோழவரம் ஏரியில் மொத்த கொள்ளளவு ஆன 1.081 டி.எம்.சி.யில் 228 மில்லியன் கன அடியும், செம்பரம்பாக்கம் ஏரியில் மொத்த கொள்ளளவான 3.645 டி.எம்.சி.யில் 2.860 டி.எம்.சி. தண்ணீரும், கண்ணன் கோட்டை தேர்வாய்கண்டிகை ஏரியில் 500 மில்லியன் கனஅடியில் 322 மில்லியன் கன அடியும் தண்ணீர் நிரம்பியுள்ளது.

கடந்த மாத இறுதி வரை 5 ஏரிகளில் மொத்தம் 46 சதவீதம் மட்டுமே தண்ணீர் நிரம்பி இருந்தது. ஃபெஞ்சல் புயலால் பெய்த கனமழையின் காரணமாக ஏரிகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதற்கிடையே வங்க கடலில் தற்போது மேலும் உருவாகும் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி 12 ந்தேதி தமிழகம் நோக்கி வர உள்ளதாக சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது. இதனால் வரும் 6 நாட்களுக்கு கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது. இதனால் சென்னை குடிநீர் ஏரிகள் அடுத்த வாரத்தில் முழு கொள்ளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தேசிய கல்விக்கொள்கையை ஏற்றால்தான் தமிழகத்துக்கு ரூ.2,400 கோடி நிதி மத்திய அரசு மீண்டும் திட்டவட்டம்

சென்னை, டிச.12

நாட்டில்உள்ளஅனைத்து குழந்தைகளுக்கும் கல்வியை உறுதி செய்வதற்கும், அவர்களுக்கு பாகுபாடின்றி தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் மத்திய அரசு சமக்ரா சிக்ஷா என்ற அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்தின் கீழ் மாநில அரசுகளுக்கு நிதி உதவி வழங்கி வருகிறது.இந்ததிட்டத்தின் கீழ் 8 வடகிழக்கு மாநிலங்கள் தவிர மற்ற மாநிலங்களில் மத்திய அரசின் பங்களிப்பு 60 சதவீதம் ஆகும். மாநில அரசு பங்களிப்பு 40 சதவீதம் ஆகும்.

அனைவருக்கும் கல்வி இயக்கம் திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு கடந்த 2023 24ம் ஆண்டில் ரூ.2,120.25 கோடி விடுவிக்க வேண்டும். ஆனால் அதில் ரூ.1,871.96 கோடி மட்டுமே விடுவித்தது. ரூ.248.29 கோடியை வழங்காமல் நிறுத்தி விட்டது. அதற்கு காரணம், தமிழக அரசு பிஎம்ஸ்ரீ திட்டத்தில் இணையவில்லை என்று கூறியது.

மத்திய அரசின் தேசிய கல்வி கொள்கையின் அடிப்படையில் பிஎம்ஸ்ரீ திட்டத்தை செயல்படுத்தினால், அது மத்திய அரசின் தேசிய கொள்கையை ஏற்றுகொண்டது போல் ஆகிவிடும். மேலும் தமிழக அரசின் கொள்கையான 2 மொழி கொள்கைக்கு பதில் 3மும்மொழிகொள்கையை அமல்படுத்த வேண்டிய நிலை வந்துவிடும் என்று கூறி எதிர்ப்பு தெரிவித்தது.

எனவே தமிழக அரசு பிஎம்ஸ்ரீ திட்ட ஒப்பந்தத்தில் சில மாற்றங்களை கூறியது. ஆனால் அதனை மத்திய அரசு எற்று கொள்ளவில்லை. எனவே மத்திய அரசு, 202324ம் ஆண்டில் விடுவிக்க வேண்டிய அனைவருக்கும் கல்வி இயக்க நிதி ரூ.248.29 கோடியை விடுவிக்கவில்லை. அதுமட்டுமின்றி 202425ம் ஆண்டுக்கான ரூ.2,151.59 கோடியை வழங்காமல் உள்ளது. ஆக மொத்த மத்திய அரசு ரூ.2,399.88 கோடி நிதி ஒதுக்க வேண்டி உள்ளது. இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் மோடியை நேரில் சந்தித்தும் வலியுறுத்தினார். ஆனால் மத்திய அரசு, பிஎம்ஸ்ரீ திட்டத்தில் இணைந்தால் தான் அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்தை விடுவிக்க முடியும் என்று கூறியது.

இந்த நிலையில் பாராளுமன்றத்தில் தமிழகத்திற்கு மத்திய அரசு ஒதுக்க வேண்டிய அனைவருக்கும் கல்வி இயக்கம் நிதி குறித்து தி.மு.க. எம்.பி. ஆ.ராசா கேள்வி எழுப்பினார். அதற்கு மத்திய அரசு எழுத்துபூர்வமாக பதிலளித்துள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு 202425 கல்வியாண்டு தொடங்குவதற்கு முன்பு பிஎம்ஸ்ரீ ஒப்பந்தத்தில் கையெழுத்திட தமது உறுதிமொழியை கடந்த மார்ச் மாதம் 15 ந்தேதி அளித்தது. அதன் பின், பள்ளி கல்வி மற்றும் எழுத்துத்திறன் துறை, தமிழக அரசுக்கு ஒரு ஒப்பந்த வரைவு அனுப்பியது. ஆனால் கடந்த ஜூலை 6ந்தேதி தமிழக அரசு ஒரு திருத்தப்பட்ட ஒப்பந்தத்தை அனுப்பியது. அதில் தேசிய கல்வி கொள்கை 2020ஐ முழுமையாக செயல்படுத்துவது தொடர்பான முக்கியமான பத்தி நீக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து, மத்திய அரசு மாற்றங்கள் இல்லாமல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட தமிழக அரசிடம் மீண்டும் மீண்டும் கோரிக்கை வைத்து வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அதாவது தமிழக அரசு பிஎம்ஸ்ரீ திட்டத்தில் இணைந்தால்மட்டுமேதமிழகத்திற்கான நிதியை விடுவிக்க முடியும் என்பதில் மத்திய அரசு உறுதியாக இருப்பது தெரியவருகிறது.

## 'வீர தீர சூரன்' படத்தின் ரிலீஸ் அப்டேட்



'சேதுபதி, சித்தா' படங்களை இயக்கிய பிரபல இயக்குனர் அருண்குமார் இயக்கத்தில் விக்ரம் தனது 62 வது படமான 'வீர தீர சூரன்' படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும், சுராஜ் வெஞ்சராமுடு, துஷரா விஜயன், சித்திக் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படத்தை எச்.ஆர்.பிக்சர்ஸ் சார்பில் ரியா ஷிபு தயாரித்துள்ளார். இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இப்படம் இரண்டு பாகங்களாக உருவாக உள்ளதை படக்குழு உறுதி செய்துள்ளது. தற்போது இப்படத்தின் இரண்டாவது பாகத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவு பெற்றுள்ளது. முதலில் இப்படத்தின் இரண்டாம் பாகம் வெளியாக உள்ளது. இப்படத்தின் வெளியீட்டிற்குப் பிறகு, முதல் பாகம் உருவாகும் என படக்குழு தெரிவித்துள்ளது.

இப்படத்தில் நடிகர் விக்ரம் கிராமிய தோற்றத்தில் 'காளி' என்ற கேங்ஸ்டர் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். படத்தின் டைட்டில் டீசர் மற்றும் போஸ்டர்கள் சில மாதங்களுக்கு முன் வெளியாகி வைரலாகின. படத்தில் எஸ்.ஜே சூர்யா காவல் அதிகாரியாக நடித்துள்ளார். படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு மதுரையில் கடந்த மாதம் முடிவடைந்தது. தமிழ்நாட்டில் இப்படத்தின் திரையரங்க விநியோக உரிமையை 5 ஸ்டார் நிறுவனம் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில் 'வீர தீர சூரன்' படத்தின் டீசர் நேற்று வெளியானது. இப்படம் அடுத்தாண்டு பொங்கலுக்கு வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டிருந்து. இதற்கிடையில் தற்போது இப்படத்தின் ரிலீஸ் தேதி குறித்த புதிய தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 24ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே விரைவில் இப்படம் தொடர்பான அடுத்தடுத்த அப்டேட்டுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அலங்கு படத்தின் டிரெய்லர் வெளியானது

'உறுமீன்', 'பயணிகள் கவனிக்கவும்' போன்ற திரைப்படங்களின் இயக்குனரான எஸ்.பி. சக்திவேல் இயக்கத்தில் உருவாகி ரிலீஸுக்கு தயாராகி வரும் திரைப்படம் 'அலங்கு'. இத்திரைப்படத்தில் கதாநாயகனாக குணாநிதி நடித்துள்ளார். மேலும் மலையாள நடிகர் செம்பன் வினோத் ஜோஸ் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். இவர்களுடன் நாய் ஒன்றும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளது.

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தருமபுரி தொகுதியில் சவுமியா அன்புமணிக்கு ஆதரவாக மகள் சங்கமித்ரா பிரசாரங்களை மேற்கொண்டது பலருக்கும் நினைவிருக்கலாம். சங்கமித்ரா திரைப்பட தயாரிப்பாளராக களமிறங்கியிருக்கிறார். புலம்பெயர்ந்து தொழில் செய்யும் பழங்குடியினரின் வாழ்க்கையை பதிவு செய்யும் 'அலங்கு' திரைப்படமானது, தமிழக கேரள எல்லைப்பகுதியில் நடந்த உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆக்சன் திரில்லர் படமாக உருவாகியிருக்கிறது.

கேரளாவை சேர்ந்த அரசியல்வாதி குழுவுக்கும் தமிழக பழங்குடி இனத்தை சேர்ந்த இளைஞர் குழுவுக்கும் இடையே நடக்கும் சம்பவங்கள் தான் திரைப்படத்தின் மையம், அதன் பின்னணி என்ன என்பதை உண்மை சம்பவங்களின் அடிப்படையில் திரைக்கதையாக வடிவமைத்துள்ளனராம்.

அலங்கு படத்தின் டிரெய்லரை பார்த்து படக்குழுவினரை சந்தித்து பாராட்டி உள்ள நிலையில் தயாரிப்பாளர் சங்கமித்ரா ரஜினியிடம் வாழ்த்து பெற்றுள்ளார். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. இது குறித்த பதிவை இயக்குனர் எஸ்.பி. சக்திவேல் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார்.

அலங்கு, என்பது தமிழ் குடியின் முதல் நாட்டு நாய் இனத்தைச் சார்ந்ததாம். ராஜராஜ சோழனின் படையில் போர் நாயாக இருந்ததாகவும் வரலாற்று சான்றுகளும் ஆய்வாளர்களும் கூறுகின்றனர். இக்கதையின் அடிப்படை தன்மைக்கும் நினைவூட்டலுக்கும் இந்தப் பெயர் மிகவும் பொருந்தியிருப்பதால் இத்திரைப்படத்துக்கு அலங்கு என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இப்படம் வருகின்ற 27ம் தேதி வெளியாக உள்ளது.

இந்த நிலையில் இப்படத்தின் டிரெய்லரை ரஜினிகாந்த் வெளியிட்டுள்ளார்.

## சூர்யா 45 படத்தில் கேமியோ ரோலில் விஜய்சேதுபதி

தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் சூர்யா. இவரது நடிப்பில் சிறுத்தை சிவா இயக்கத்தில் கடந்த 14ந் தேதி 'கங்குவா' படம் வெளியானது. இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது. அதனை தொடர்ந்து கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் சூர்யா 44வது திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படம் விரைவில் வெளியாக உள்ளது.

தற்போது ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் தனது 45வது படத்தில் நடித்து வருகிறார்.

இந்த படத்திற்கு தற்காலிகமாக 'சூர்யா 45' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்தினை டிரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. சமீபத்தில் இந்த படத்தின் போஸ்டர் வெளியாகி வைரலானது. இப்படத்தின் ஒளிப்பதிவை ஜிகே விஷ்ணு மேற்கொள்கிறார்.

இந்த படத்தில் திரிஷா ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். சூர்யாவும் திரிஷாவும் இணைந்து மவுனம் பேசியதே, ஆறு ஆகிய படங்களில் இணைந்து நடித்துள்ளனர். 19 வருடங்கள் இடைவெளிக்கு பிறகு இவர் மீண்டும் இணைந்து நடிப்பது ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளது. மேலும் இந்த படத்தில் காளி வெங்கட், ஸ்வாசிகா, மலையாள நடிகர் இந்திரன்ஸ் ஆகியோர் நடிக்கின்றனர்.

இதற்கிடையில், இப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு பணிகள் கோவையில் பூஜையுடன் தொடங்கி, விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், இப்படத்தில் விஜய் சேதுபதி கேமியோ ரோலில் நடிப்பதற்காக படக்குழு அவரிடம் பேச்சு வார்த்தை நடத்தி உள்ளதாக கூறப்படுகிறது. அவரின் பதிலுக்காக காத்துக் கொண்டுள்ளனர். விஜய் சேதுபதி இப்படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது. விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மகளிர் கிரிக்கெட்; நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடர்... ஆஸ்திரேலிய அணியில் ஜார்ஜியா வோல் சேர்ப்பு



ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணி தற்போது சொந்த மண்ணில் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஆடி வருகிறது. இந்த தொடரில் 2 ஆட்டங்கள் முடிந்துள்ள நிலையில் இரு ஆட்டங்களிலும் ஆஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றிவிட்டது. இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி போட்டி நாளை நடக்கிறது.

இந்த தொடர் நிறைவடைந்ததும் ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணி நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆட உள்ளது.இந்ததொடர்வரும்19ம்தேதிதொடங்குகிறது. இந்த தொடரின் 3 ஆட்டங்களும் வெல்லிங்டனில் நடக்கிறது.

இந்த தொடருக்கான ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணிகடந்தசிலதினங்களுக்குமுன்னர்அறிவிக்கப்பட்டது. இந்த அணிக்கு அலிசா ஹீலி கேப்டனாகவும், தஹ்லியா மெக்ராத் துணை கேப்டனாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில்,நியூசிலாந்துக்குஎதிரானஒருநாள்தொடருக்கானஆஸ்திரேலியஅணியில்21வயதுஇளம்வீராங்கனையான ஜார்ஜியா வோல் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் சிறப்பாக செயல்பட்டதன் மூலம் ஜார்ஜியா வோல் ஆஸ்திரேலிய அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஆஸ்திரேலிய அணி விவரம்; அலிசா ஹீலி (கேப்டன்), தஹ்லியா மெக்ராத் (துணை கேப்டன்), டார்சி பிரவுன், ஆஷ்லே கார்ட்னர், கிம் கார்த், அலனா கிங், போப் லிட்ச்பீல்ட், சோபி மோலினக்ஸ், பெத் மூனி, எல்லிஸ் பெர்ரி, மேகன் ஷட், அன்னபெல் சதர்லேண்ட், ஜார்ஜியா வோல், ஜார்ஜியா வரேகம்.

## ஆஸ்திரேலிய அணி மிகவும் வலிமையானது என்று நான் நம்பவில்லை இந்திய முன்னாள் வீரர்




ஆஸ்திரேலியா இந்தியா இடையே 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் முதல் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. ஆனால் 2வது போட்டியில் இந்தியாவை தோற்கடித்த ஆஸ்திரேலியா தொடரை சமன் செய்து பதிலடி கொடுத்துள்ளது.

அதனால் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு முன்னேற இந்தியாஅடுத்த3போட்டிகளிலும்கட்டாயம்வென்றாகவேண்டியஇக்கட்டான சூழலில் உள்ளது. அந்த சூழலில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3வது போட்டி வரும் 14ம் தேதி காபா மைதானத்தில் தொடங்க உள்ளது.

இந்நிலையில், இந்தியாவுக்கு எப்போதுமே சவாலை கொடுக்கும் டிராவிஸ் ஹெட் அவுட் சைட் ஆப் ஸ்டம்ப் லைனில் பலவீனத்தைக் கொண்டிருப்பதாக முகமது கைப் தெரிவித்துள்ளார். மேலும், நாம் பயப்படும் அளவுக்கு இந்த ஆஸ்திரேலிய அணி அவ்வளவு வலுவானது என்று நான் நம்பவில்லை எனவும் அவர் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

ஸ்காட் போலண்ட் ஆஸ்திரேலிய அணிக்காக தொடர்ச்சியாக விளையாடுவதில்லை. அப்படி இருந்தும் கிடைக்கும் வாய்ப்பில் எப்படி எதிரணியை வீழ்த்த முடியும் என்பதை அவர் தெரிந்து வைத்துள்ளார். அப்படிப்பட்ட நிலையில் நம்மால் ஏன் டிராவிஸ் ஹெட்டை வலையில் விழ வைக்க முடியாது?. அவருடைய பலவீனம் அவுட் சைட் ஆப் ஸ்டம்ப் என்றால் நாம் ஏன் அங்கு தொடர்ச்சியாக பந்து வீசக்கூடாது?. ஒவ்வொரு பேட்ஸ் மேனுக்கும் பலவீனம் இருக்கும்.

சுமாரான பவுலர்கள் கூட அவுட் சைட் ஆப் ஸ்டம்ப்பில் பந்து வீசினால் விராட் கோலியை அவுட்டாக்க முடியும் என்பதை தெரிந்து வைத்திருக்கிறார்கள். எனவே அதே போன்ற யுக்தியை நீங்கள் டிராவிஸ் ஹெட்டுக்கு எதிராக பயன்படுத்த வேண்டும். தரமான திட்டத்துடன் முதல் பந்திலிருந்தே அவருடைய பலவீனத்தை தாக்கினால் விக்கெட்டை எடுக்கமுடியும்.அதைசெய்யாமல்நாம்தவறுசெய்கிறோம்.

நாம் பயப்படும் அளவுக்கு இந்த ஆஸ்திரேலிய அணி அவ்வளவு வலுவானது என்று நான் நம்பவில்லை. நாம் முதல் போட்டியில் வென்றோம். ஆஸ்திரேலியா நன்றாக விளையாடியதால் இரண்டாவது போட்டியில் வென்றார்கள். அதனால் 1 1 என்ற கணக்கில் தொடர் சமனில்இருக்கிறது.நம்முடையஇந்தியஅணிவலுவானது. எனவேகாபாவுக்குசென்று3வதுபோட்டியில்விளையாடும் போது நம்மால் கம்பேக் கொடுக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.